மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1984–ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

(முற்பகல் 11-50)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1984–ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

THIRU J. Hemachandran I object to the introduction of the Bill, sir.

MR. SPEAKER Thiru Hemachandran's objection is recorded.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படியே போனால் புரசீஜர் போய்விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்மொழியை வளர்க்க வேண்டும் என்பதை பற்றியும், தமிழ் கலையையும், கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்கு நடவடிக்கைகள் அரசு எடுக்க வேண்டும் என்பதிலேயும் எங்களுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. அதை வளர்ப்பதற்கு எல்லா நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்றும் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பதிலே நாங்கள் ஆதரிக்

கிறோம். அதற்கு நியாயமாக என்ன என்ன ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமோ அந்த ஒத்துழைப்புகளை நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் இந்தச் சட்டம் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏன் என்றால் இதனுடைய எக்ஸ்பிளனேட்டரி மெமோரண்டத்திலே ஏற்கனவே சென்னை உயர்நீதி மன்றம் ஒரு வழக்கு சம்பந்தமாக கொடுக்கப்பட்ட தீர்ப்பை சரிக்கட்டுவதற்காக கொண்டு வந்து இருக்கக்கூடிய சட்டம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய தாழ்மையான கருத்து என்னவென்றால் இந்தச் சட்டத்தைக்கூட உச்ச நீதி மன்றத்திற்கு யாராவது எடுத்துச் செல்வார்களானால் அரசியல் சட்டத்தினுடைய அடிப்படையான அம்சங்களில் அதிலும் fundamental right for exprission of என்ற கருத்து சமீப கால சட்டத்தில் அடிபட்டு போய்விடுகின்ற ஆபத்து இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நேரத்தில் இந்தச் சட்டத்திலே குறிப்பிட்டு இருக்கக்கூடிய சில பிரச்சினை சம்பந்தமாகவும், ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன், ஏன் என்றால் ஒரு ஆண்டில் 9 மாத காலம் தமிழ் திரைப்படங்களை திரையிட வேண்டும், என்ற ஒரு சட்டத்தை இயற்றுவது சரியாக இருக்காது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் வரும்போது திரைப்படத்தைப் பற்றி முழுமையாகப் பேசலாம். நல்லது அல்ல என்று சொல்கிறீர்கள், அதற்கான காரணங்களை இப்போதே சொல்லிவிட்டால் அப்புறம் சொல்வதற்கு கஷ்டமாக இருக்கும்.

THIRU J. HEMACHANDRAN: Please allow me to speak on the subject.

Mr. SPEAKER: I am not going to allow you to speak on the subject. If you have got and point, you can say one, two or three. There ends the matter. I am not allowing any discussion on this.

THIRU J.HEMACHANDRAN: Fundamental right is affected. I want to say how this bill will affect our fundamental rights ஆகவே, ஏன் சொல்கிறேன் என்றால் தமிழ்ப் படங்கள் இன்று கேரளாவிலும், கர்நாடகாவிலும், பம்பாயிலும் மற்றும் இது போன்ற இடங்களிலும் காட்டப்படுகின்றன. பல ஆயிரக்கணக்கான மக்கள் அந்தத் தமிழ் படங்களை விரும்பி ரசித்து கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இயற்றுவதன் காரணமாக இந்தியாவில் தேசிய ஒருமைப்பாடு இன்றைக்கு ஒரு பிரச்சினையாக வளர்ந்து இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்தி அந்த மாநிலங்களில் வேறு மாதிரியாக ஒரு சட்டம் இயற்றினால் தமிழ் சினிமா உலகத்திற்கு அந்தப் படங்களை காட்டுவதிலும், படங்களை எடுப்பதிலும் இடைஞ்சல் ஏற்படும், அதை வளர்க்கவேண்டுமா? அதனால் ஒரு சில பிரச்சினைகள் ஏற்படுவதற்கு அது காரணமாக இருக்கும். ஆகவே நான் சொல்கிறேன் தமிழ் சினிமா காட்டுவதற்கு, கலையை

கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு என்ன என்ன நடவடிக்கைகளை மற்ற முறைகளில் இப்படிப்பட்ட சட்டத்தைப் போடாமல், அரசு எடுக்க முடியுமோ அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். அப்படியில்லாமல் இப்படிப்பட்ட உச்சநீதி மன்றத்திற்குச் சென்று ஒரு கேள்விக் குறியாக நிற்கக்கூடிய ஒரு சட்டத்தை இயற்றுவது சரியாக இருக்குமா? this is not good.

ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்பதுதான் அரசுக்கு விவேகமாக இருக்கும் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்து, இதை வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறி முகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "1984–ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "தமிழ்நாடு 1984–ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

THIRU P. PONNURANGAM: I object to the introduction of this Bill.